**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.06.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான ஊக்கமளிக்கும் மற்றும் தொழில் வழிகாட்டுதலுக்கான சிறப்பு நிகழ்ச்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , மாணவர் நல மையம் சார்பில் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் உரை மற்றும் தொழில் வழிகாட்டுதலுக்கான சிறப்பு நிகழ்ச்சி 20.06.2022 அன்று அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை வளாகத்தில் பயிலும் இளநிலை இறுதி ஆண்டு , முதுநிலை மற்றும் மூதறிவியல் மாணவர்களுக்கு இவ்விழாவானது ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு முனைவர்.நா.மரகதம், மாணவர் நல மையம், முதன்மையர் அவர்கள் வரவேற்புரை நல்கினார் . இந்த நிகழ்ச்சியை பல்கலைக்கழக துணைவேந்தர் மதிப்பிற்குரிய பேராசிரியர். வெ. கீதாலெட்சுமி அவர்கள் முன்னிலை வகித்து தலைமையுரையாற்றினார் .

கனடா நாட்டிலிருந்து வருகை புரிந்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்லைக்கழக முன்னாள் மாணவர் முனைவர் .சங்கரன் கிருஷ்ணராஜ் , பொது இயக்குநர் , வேளாண்மை மற்றும் வேளாண் உணவுத் துறையின் திட்ட கிளை , சேவைகள் மற்றும் திட்ட சிறப்பு இயக்குநர், கனடா, அவர்கள் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாகவும் மற்றும் தொழில் வழிகாட்டுதல் , அயல்நாட்டில் மேற்படிப்பு மற்றும் பணிபுரிவதற்கான வழிமுறைகளை மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தது மட்டுமன்றி மாணவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எளிதில் புரியும் வண்ணம் பதிலளித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு முனைவர். என். வெங்கடேச பழனிசாமி , முதன்மையர் (வேளாண்மை), முனைவர். எ. லட்சுமனன், முதன்மையர் (முதுநிலை), மற்றும் முனைவர் . எ. ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல் ), த.வே.ப.க. கோவை ஆகியோர் விழாவில் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர் . முனைவர். ப. முத்துலட்சுமி, பேராசிரியர் (தாவர நோயியல்), மாணவர் நல மையம் , த.வே.ப.க., கோவை அவர்கள் நன்றியுரையாற்ற இவ்விழாவானது இனிதே நிறைவுற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்